அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6

மேல்நிலைப் பொதுத்தேர்வு முதலாம் ஆண்டு மார்ச்–2018

தமிழ் முதல் தாள் - விடைக்குறிப்புகள்

விடைத்தாள் மதிப்பிடும்போது கீழே குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தவறாது பின்பற்றுதல் வேண்டும்.

- நீலம் மற்றும் கருப்புமையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
- விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து தொடர்பிழை சொற்பிழை, எழுத்துப்பிழை,ஒற்றுப்பிழை, நிறுத்தற்குறிப்பிழை, இலக்கணப் பிழையின்றி இருப்பின் முழுமதிப்பெண் வழங்குதல் வேண்டும்.
- எழுத்துப்பிழை,ஒற்றுப்பிழை, இலக்கணப் பிழை ஒவ்வொன்றுக்கும் கால் மதிப்பெண்வீதம் குறைக்கப்படவேண்டும். அவ்வாறு குறைக்கப்படும் மதிப்பெண் எக்காரணம் கொண்டும் வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் மிகாமல் இருத்தல்வேண்டும்.
- தவறான விடைகளைக் (×) குறியிட்டும், தொடர்பிழைகளை அடிக்கோடிட்டும், ஒற்றுப்பிழைகளைக் (^) குறியிட்டுக் காட்டியும் விதிப்படி அவற்றிற்கும் மதிப்பெண்களைக் குறைத்தல் வேண்டும்.
- மதிப்பெண் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சரியான கருத்திற்கும் தனித்தனியே (✓) குறியிடுதல் வேண்டும்.
- மிகையாக இருப்பின் ‘மிகை’ என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.
- ஒரே விடை மீண்டும் எழுதப்பட்டிருப்பின் ‘மீண்டும்’ என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.

| வினா எண் | பகுதி –I<br>உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக | மதிப்பெண்<br>20 ×1 = 20 |
|---|---|---|
| 1 | ஆ) அரசுக்கணக்கர் | |
| 2 | ஆ) பேகன் | |
| 3 | இ) ஓரம்போகியார் | |
| 4 | ஆ) உவம உருபு | |
| 5 | ஆ) திருக்குறள் | |
| 6 | அ) பிறிதுமொழிதல் அணி | |
| 7 | இ) அடையடுத்த கருவியாகு பெயர் | |
| 8 | இ) நச்சினார்க்கினியர் | |
| 9 | ஆ) செலவியற்காண்டம் | |
| 10 | இ) சுந்தரம் பிள்ளை | |
| 11 | அ) கடல் | |
| 12 | ஆ) இரட்டைக்கிளவி | |
| 13 | அ) 250 | |
| 14 | ஆ) ஒரிசா | |
| 15 | ஆ) காப்பு | |
| 16 | இ) ந.கருணாநிதி | |
| 17 | இ) கண்ணதாசன் | |
| 18 | அ) திருநாவுக்கரசர் | |
| 19 | இ) ஆண்டாள் | |
| 20 | ஆ) வினைத்தொகை | |

| வினா எண் | பகுதி – II<br>வினா எண் 30 கட்டாய வினா. மீதமுள்ள 21 முதல்29 வரையிலுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு விடையளித்திருந்தால் போதுமானது. | மதிப்பெண்<br>7 × 2 = 14 |
|---|---|---|
| 21 | <u>புறநானூறு குறிப்பு</u><br>• இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.<br>• 400 பாடல்களைக் கொண்டது.<br>• புறம், புறப்பாட்டு எனவும் வழங்கப்படும்.<br>• பல்வேறு காலங்களில் வாழ்ந்த பல்வேறு புலவர்களால் இயற்றப்பட்டது. | |
| 22 | <u>அமரருள் உய்ப்பது</u><br>அடக்கம் என்னும் சிறந்த குணம். | |
| 23 | <u>பகுபத உறுப்பிலக்கணம்</u><br>குறிப்பு :<br>பிரித்து எழுதுதல் – 1/2 மதிப்பெண்<br>குறிப்பு எழுதுதல் – 1/2 மதிப்பெண்<br>1. ஈன்ற – ஈன்+ற்+அ<br>ஈன்– பகுதி<br>ற்– இறந்த கால இடைநிலை<br>அ – பெயரெச்ச விகுதி<br>2. பணிதல் – பணி + தல்<br>பணி – பகுதி<br>தல் – தொழிற்பெயர் விகுதி | |
| 24 | <u>“யாகாவா” எனத் தொடங்கும் குறள்</u><br>யாகாவா ராயினு நாகாக்க; காவாக்கால்<br>சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. | |
| 25 | <u>பகுபத உறுப்பிலக்கணம்</u><br>பிரித்து எழுதுதல் – 1/2 மதிப்பெண்<br>குறிப்பு எழுதுதல் – 1/2 மதிப்பெண்<br>1. பாடினாள் – பாடு +இன் + ஆள்<br>பாடு – பகுதி<br>இன் – இறந்தகால இடைநிலை<br>ஆள் – பெண்பால் வினைமுற்று விகுதி<br>2. வெருவி – வெருவு + இ<br>வெருவு –பகுதி<br>இ – வினையெச்ச விகுதி | |
| 26 | <u>திருத்தக்க தேவர் புனைந்த வேறொரு நூல்:</u><br>நரிவிருத்தம் | |
| 27 | <u>வையம் கலங்குமாறு தமிழர் செய்யத்தக்கது</u><br>• வெள்ளம் போல் தமிழர் கூட்டம். வீரம் நிறைந்த கூட்டம்.<br>• உடலால் பலர் உள்ளத்தால் ஒருவரே.<br>• தமிழரைப் பிறர் வஞ்சத்தால் நெருங்க இயலாது என ஒற்றுமையுடன் வாழ்தல் . | |
| 28 | <u>தஞ்சை வேதநாயக சாத்திரியார் எழுதிய பிற நூல்கள்:</u><br>• ஞானத்தச்சன்<br>• ஞானவுலா<br>• ஆரணாதிந்தம்<br>• பல்வேறு கீர்த்தனங்கள் | |

| | | |
|---|---|---|
| 29 | <u>திருப்பாவை – குறிப்பு</u><br>• திருப்பாவை திருமாலைப் போற்றும் பாடல் ஆகும்.<br>• இதை அருளியவர் ஆண்டாள்.<br>• பக்திக் காலத்தில் எழுந்த உயரிய இலக்கியம் திருப்பாவை.<br>• இந்நூல் 'வேதம் அனைத்திற்கும் வித்து' எனப் போற்றப்படுகிறது. | |
| 30 | <u>"கெடும்"– என முடியும் குறட்பா</u><br>• அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை<br>வியந்தான் விரைந்து கெடும்.<br>• அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல<br>இல்லாகித் தோன்றாக் கெடும்.<br>• உளவரை தூக்காத ஒப்புர வாண்மை<br>வளவரை வல்லைக் கெடும்.<br>**(ஏதேனும் ஒரு குறள் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | |
| **பகுதி –III**<br>**வினா எண் 40 கட்டாய வினா. மீதமுள்ள 31 முதல்39 வரையிலுள்ள வினாக்களுள் எவையேனும் <u>ஆறனுக்கு</u> விடையளித்திருந்தால் போதுமானது.** | | மதிப்பெண்<br>**7 × 3 = 21** |
| 31 | <u>தாயுமானவர் – குறிப்பு</u><br>• தாயுமானவர் பிறந்த ஊர் திருமறைக்காடு.<br>• காலம் கி.பி 18ஆம் நூற்றாண்டு.<br>• பெற்றோர் – கேடிலியப்ப பிள்ளை, கெஜவல்லி அம்மையார்.<br>• தாயுமானவர் பாடல்கள் 'தமிழ்மொழியின் உபநிடதம்' என்று அழைக்கப்படுகிறது.<br>• இவருடைய ஞானகுரு –"மௌனகுரு" ஆவார். | |
| 32 | <u>ஆராய வேண்டிய நால்வகை வலிமைகள்:</u><br>• வினை வலிமை.<br>• தன் வலிமை.<br>• மாற்றான் வலிமை.<br>• துணை வலிமை. | |
| 33 | <u>பொருளைப் போற்றி வழங்கும் நெறி:</u><br>• தன்னிடம் உள்ள பொருளை அளவறிந்து கொடுத்தல் வேண்டும்.<br>• அளவறிந்து கொடுப்பதே பொருளைப் போற்றி வழங்கும் நெறி. | |
| 34 | <u>" நங்கை நலத்தது இது"– இடஞ்சுட்டி பொருள்</u><br>**இடம்** : சீவகசிந்தாமணியிலுள்ள காந்தருவதத்தையார் இலம்பகம்,<br>**பொருள்** : "இந்த யாழானது காந்தருவதத்தையின் குலம் முதலிய சிறந்த நலத்தைப் போல மிகவும் உயர்ந்தது" என்றான் சீவகன்<br>**விளக்கம்** : வீணாபதி தந்த யாழ் பலவும் குறைபாடுகள் கொண்டதாய் இருந்தன. கடைசியாகத் தரப்பட்ட யாழ், தத்தை போல் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது என்றான் சீவகன். | |
| 35 | <u>சீறாப்புராணக் காண்டங்கள்:</u><br>மூன்று காண்டங்கள் உடையது.<br>அவை,<br>• விலாதத்துக் காண்டம்<br>• நுபுவத்துக் காண்டம்<br>• ஹிஜிரத்துக் காண்டம்<br>**(இவற்றை பிறப்பியற் காண்டம், செம்பொருட்காண்டம், செலவியற்காண்டம் என எழுதியிருப்பினும் முழு மதிப்பெண் வழங்குக)** | |

| | | |
|---|---|---|
| 36 | **பிறந்தார் எனப்படாதார்:**<br>• உலகில் ஒவ்வொரு கணத்திலும் எத்தனையோ பேர் பிறக்கின்றனர், இறக்கின்றனர்.<br>• அவரெல்லாம் உலகில் பிறந்தவர்களாய்க் கருதப்பட மாட்டார்.<br>• அழியாது உலகில் நிலைத்து நிற்கும் புகழ் உடம்பைப் பெறாதவர் பிறந்தார் எனப்படாதவர் ஆவார். | |
| 37 | **குறத்தி ஏதன் மலையைப் பற்றி உரைப்பன:**<br>• நாங்கள் வாழ்வதற்கு முதன்முதலாய் இருப்பிடமாய் விளங்கியது.<br>• ஆண்டவன் முதன் முதலில் படைத்தது.<br>• இனிமையாக வாழ்வதற்கு நான்கு வகையான சூழலை அமைத்துக் கொடுத்து, அழிவற்ற பெருவாழ்வு தந்தது.<br>• பேய்கள் எம் அறிவைக் கெடுத்ததனால், இறைவன் எங்களை வெகுண்டு சபித்தது ஏதன் மலையாகும். | |
| 38 | **தளை என்னும் பாடல் மூலம் கவிஞர் உணர்த்தும் செய்தி:**<br>• உலகம் முழுதும் இன்பமயம். வளமும் நலமும் நம்மை அழைக்கின்றது.<br>• அவற்றை அடைய நமக்கு ஆவல் துடிக்கிறது.<br>• தேவையும் நம்மைப் பிடர் பிடித்து உந்துகிறது.<br>• மனிதன் அவற்றை அனுபவிக்க இயலாமல் பல தளைகளால் கட்டுண்டு இருக்கிறான்.<br>**(பொருத்தமான பிற கருத்துக்கள் இருப்பினும் மதிப்பெண் வழங்கவும்)** | |
| 39 | **வீரசோழிய மேற்கோள் புத்தபிரானை வழிபடும் அழகு:**<br>• போதி மரத்தின் நிழலில் வீற்றிருக்கும் பெருமானே,<br>• எல்லா உண்மைகளையும் அறிந்த உன்னை தொழுகிறோம்.<br>• மக்கள் அனைவரும் வணங்கத்தக்க வகையில் ஒன்றுபட்டு ,<br>• நல்வினை, தீவினை நீக்கி; காமம் வெகுளி மயக்கம் எனும் முப்பகை வென்று; அறம், பொருள், இன்பம், வீடு உணர்ந்து நீடு வாழ்வார்களாக! | |
| 40 | **புணர்ச்சி விதி**<br>பிரித்து எழுதுதல் – 1/2 மதிப்பெண்<br>விதி கூறல் – 1 மதிப்பெண்<br>1. உறுமிடம் = உறும் + இடம்<br>விதி : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.<br>2. செறிவறிந்து = செறிவு + அறிந்து<br>விதி 1 : 'முற்றும் அற்று ஒரோ வழி' (உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்)<br>விதி 2 : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே. | |
| | **பகுதி –IV**<br>**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக** | 7 × 5 = 35 |
| 41 | **அடக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்து**<br>• அடக்கமுடையவர் அமரராய் இன்புறுவர். அடக்கமில்லாதவர் நரகத்தில் துன்புறுவர்.<br>• அடக்கம் ஒருவனுக்கு மற்றொரு செல்வம் ஆகும்.<br>• மேம்பட்ட அடக்கம், சான்றோரால் சிறப்பிக்கப்படும்<br>• அடக்கமுடையவனது உயர்வு மலையை விட மிகப்பெரியதாகும்.<br>• எல்லோரும் செருக்கின்றி வாழ்வது நல்லது. அதுவே செல்வமுடையாருக்கு மற்றொரு செல்வமாகும்.<br>• ஒரு பிறவியில் ஆமைபோல் ஐந்து புலன்களையும் அடக்குவானாயின் அது ஏழு பிறவிகளுக்கும்அவனுக்குக் காவலாய் அமையும். | |

| | | |
|---|---|---|
| | • ஒருவர் எதை அடக்காவிட்டாலும் நாவையாவது அடக்கவேண்டும். இல்லாவிட்டால் சொல் குற்றம் ஏற்பட்டுத் துன்பமடைவர்.<br>• ஒருவன் பேசும் தீய சொற்களால் பிறர்க்குத் தீமை உண்டாயின்,அவன் செய்த பிற அறங்களால் உண்டாகும் நன்மைகளும் தீமையாய் முடியும்.<br>• தீயினால் சுடுவது ஆறும், நாவினால் சுடுவது ஆறாது.<br>• ஒருவர் கோபத்தை அடக்கிக் கற்க வேண்டியவற்றை கற்று அடக்கத்தோடு வாழ்ந்தால் அவரோடு சேர அறக்கடவுள் காத்துக் கொண்டிருக்கும். | |
| | **(அல்லது)**<br>**வலியறிதல் என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகள்:**<br>• வினை வலிமை, தன் வலிமை, மாற்றான் வலிமை, துணை வலிமை ஆய்ந்து செய்தல்.<br>• தன்னால் முடியும் செயலைத் தெரிந்து உரிய முறையில் செய்பவருக்கு நிச்சயம் வெற்றிகிட்டும்.<br>• மனவெழுச்சியின் காரணமாகத் தன் வலிமையின் அளவறியாமல் செயலைச் செய்தால், இடையில் தோல்வி ஏற்படும்.<br>• தம்முடைய வலிமையை அறியாமல் தற்பெருமை கொள்பவன் விரைந்து கெடுவான்.<br>• மெல்லிய மயிலிறகையும் அளவுக்கு மீறி வண்டியில் ஏற்றினால், அதன் அச்சு முரிந்துவிடும்.அதுபோலவே வலிமையற்றவர்கள் பலர் ஒன்று கூடி எதிர்த்தால் வலிமையானவனும் தோற்றுவிடுவான்.<br>• ஒருவன் தன் எல்லையை உணர்ந்து செயல்படவேண்டும், இல்லையேல் உயிர்க்கு இறுதியைத் தரும்.<br>• அளவறிந்து கொடுக்க வேண்டும். அதுவே பொருளைப் பாதுகாக்கும் வழி.<br>• பொருள் வரவு குறைவாயினும் செலவு மிகாது இருப்பின் அதனால் கேடு உண்டாகாது.<br>• பொருளின் அளவறிந்து வாழாதான் வாழ்க்கை செழிப்புடையது போலத் தோன்றி இறுதியில் இல்லாது அழிந்துவிடும்.<br>• தன் செல்வத்தின் அளவு அறியாமல் ஒப்புரவு செய்வானாயின் விரைவில் செல்வம் அழியும். | |
| 42 | **வளைகளில் ஒன்று மட்டும் அடைபடாதிருந்ததற்கான காரணம்:**<br>• அபூபக்கர் மடிமீது அண்ணல் அவர்கள் துயில் கொண்டார்.<br>• அப்போது பாம்பு தலைநீட்டிய வளைகள் பலவற்றைத் தம் மேலாடைத் துணியைக் கிழித்து அடைத்தார்.<br>• பல வளைகளைத் துணிகொண்டு அடைத்த பிறகு, இறுதியில் துணி இல்லாததால் வளைகளில் ஒன்று மட்டும் அடைபடாது இருந்தது.<br>**அபூபக்கர் வளையை அடைத்தல்:**<br>• அடைபடாதிருந்த வளையின் வழியே பாம்பு தலையை நீட்டியது.<br>• அதனைக் கண்ட அபூபக்கர் நபிகள் பெருமானின் தூக்கம் கலைந்து விடாதவாறு தம் ஒரு காலை மெதுவாய் நீட்டி பாம்பு வெளிப்பட்ட வளையினைச் சற்றும் இடமின்றி அடைத்தார். | |

**(அல்லது)**

**<u>"முன்னோர் நொந்த புண்" என்று ஜீவகன் உரைத்தன:</u>**

- பலதலைமுறைக்குப்பின் தான் அனுபவிக்கும் சுதந்திரம் முன்னோர்கள் போராடி பெற்ற புண்என்று, சிந்தை துன்பமுற்றுக் கண்ணீர் சிந்துவர்
- அப்படி என்றால் அப்புண் யாசித்தேனும் பெறத்தக்கது.
- அது புண் அல்ல புகழ்.
- இவ்வுலகில் புண்படாமல் புகழ் உடம்பு இல்லை.
- அப்புண் உடம்பே போற்றத்தக்கது.

43

**<u>ஆடுக செங்கீரை என்று குமரகுருபரர் வேண்டுவது:</u>**

- விரலைச் சுவைத்துப் பழுத்து அமுதம் சுரந்த மென்மையான உதடுகள் வறண்டு விடாமல் - செங்கீரை ஆடுக.
- விம்மியும் பொருமியும் கீழே விழுந்து அலறியும் உன் மென்மையான குரல் குன்றாமல் - செங்கீரை ஆடுக.
- கரையும் கண் மையோடு நீ அழுது,தாமரை மலர் போன்ற உன் கண்கள் சிவக்காத படி - செங்கீரை ஆடுக.
- கண் மையைக் கரைத்து வரும் கண்ணீர் அருவி வழிந்து உன் உடல் கறுக்காதபடி- செங்கீரை ஆடுக.
- மணிகள் கட்டிய தொட்டிலை உன் கால்கள் உதைத்தும் நோகாதபடி- செங்கீரை ஆடுக.
- ஒரு காலை ஊன்றி,எழுந்து , இரு கைகளையும் ஒரு சேர நிலத்தில் பதித்து,தலை நிமிர்ந்து முகம் அசைய- செங்கீரை ஆடுக.
- பழம் பெருமை வாய்ந்த வைத்தீஸ்வரன் கோவில் என்னும் ஊரில் எழுந்தருளியிருக்கும் முத்துக்குமார சுவாமியே செங்கீரை ஆடியருள்க.

**(அல்லது)**

**திணை விளக்கம் –2 மதிப்பெண்கள், சான்று –1 மதிப்பெண்**
**திணைப்பொருத்தம் /விளக்கம் –2 மதிப்பெண்கள்**

<u>பாடாண் திணை :</u>

**திணை விளக்கம்–** பாடாண் திணை–பாடு+ஆண்+திணை.

ஒரு மன்னனது புகழ், வலிமை, வள்ளன்மை, அருள் முதலானவற்றை ஆய்ந்து கூறுவது பாடாண் திணையாகும். பாடப்படும் ஆண் மகனின் ஒழுகலாறுகளைக் குறிப்பிடுவது இத்திணையின் நோக்கமாகும்.

<u>சான்று :</u> "அறுகுளத்து உகுத்தும் ...." எனத் தொடங்கும் புறநானூற்றுப்பாடல்.

**திணைப்பொருத்தம் –** பேகன் கொடை கொடுத்தலில் தான் அறியாமை உள்ளவனாய் இருப்பானேயன்றி, பிறர்படை வந்து போரிடும் போது அறியாமை இல்லாதவனாய் இருக்கமாட்டான்.

இப்பாடலில் பேகனின் படைவீரமும் கொடைவீரமும் புலப்படுகிறது.

44

**அணி இலக்கணம்: 2 மதிப்பெண், சான்று : 1 மதிப்பெண்**
**அணிப்பொருத்தம்: 2 மதிப்பெண்.**

<u>உவமை அணி :</u>

**அணி இலக்கணம் :**

உவமை , உவமேயம், உவம உருபு வெளிப்படையாக வருவது.

**சான்று:**

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

**அணிப்பொருத்தம்**

உவமை : ஊருணி நீர்நிறைந்திருத்தல்
உவமேயம் : உலகவாம் பேரறிவாளன் திரு
உவம உருபு : அற்று (வெளிப்படையாக அமைந்துள்ளது)

**(சான்றுக்குரிய பாடல் பொருத்தமான எந்தப் பாடலாகவும் இருக்கலாம்)**

| | | |
|---|---|---|
| | (அல்லது)<br>**வேற்றுமை அணி**<br>**அணி இலக்கணம்:**<br>முதலில் இரண்டுபொருட்களுக்கிடையே உள்ள ஒற்றுமையைக் கூறி பின்னர் ஒன்றை மற்றொன்றிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது.<br>**சான்று:**<br>தீயினாற் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே<br>நாவினால் சுட்ட வடு<br>**அணிப்பொருத்தம்:**<br>தீயினால் சுடுதலும் நாவினால் சுடுதலும் ஒப்புமைப்படுத்திக் காட்டியபின் தீயினால் சுட்ட புண் ஆறிவிடும்,நாவினால் சுட்டவடு ஆறாது என வேறுபடுத்திக் காட்டப்படுவதால் வேற்றுமை அணியாயிற்று.<br>**(சான்றுக்குரிய பாடல் பொருத்தமான எந்தப் பாடலாகவும் இருக்கலாம்)** | |
| 45 | **பூக்கட்டும் புதுமை என்னும் தலைப்பில் அமைந்துள்ள கவிதை அழகு.**<br>1.பாவகை – எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்<br>2.பாவோசை – அகவலோசை<br>3. எதுகைத் தொடை<br>பூக்கின்ற, காக்கின்ற, போக்குதலே ,<br>செங்கதிர், பொங்கி, துங்கம், இங்கினி<br>4. மோனை நயம்<br>பூக்கின்ற – பூக்கள்<br>புதியனவாய் – புதுமை<br>காக்கின்ற – காகிதப்பூ<br>பொங்கி – பொய்யாத<br>5. உவமை நயம்<br>காகிதப்பூப் போல் விரியும் புதுமை<br>6. இயைபுத் தொடை<br>பூக்கள் அல்ல – புதுமை அல்ல<br>சிரித்திருக்கும் – வாய் சிரிக்கும்<br>பயிர் சிரிக்கும் – புலம் சிரிக்கும்<br>7. அணிநயம் – உவமையணி<br>**குறிப்பு – பாடற்பொருளை மட்டும் எழுதியிருப்பின் 3 மதிப்பெண் வழங்கலாம்.** | |
| | (அல்லது)<br>**சிலுவைமிசைக் கண்ட இறைவனது பண்பாக எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை கூறுவன:**<br>சிலுவைமிசைக் கண்ட இறைவனது பண்பு<br>• தேவர்களுக்கெல்லாம் தேவனாய் இருப்பவர் இயேசு<br>• அவர் முடிவே இல்லாத இறைவர்<br>• திருமறைக்கூறும் பொருளாய் இருப்பவர்<br>• சிறந்த பண்புகளைக் கொண்டவர்<br>• பயன் எதிர்பாராமல் உதவுபவர்<br>• மக்களின் துன்பத்தைப் போக்க மனித வடிவம் கொண்டு விடாப்பிடியாய் முன்னின்று நடத்திக் காட்டுபவர் | |
| 46 | **வதுவை செல்லா நின்றுழித் தலைமகற்குத் தோழி கூறியவை:**<br>• நெருப்பு போன்ற நிறமுடைய மலர்களை உடையது வேங்கை மரம்.<br>• அம்மரத்தின்மீது வீற்றிருந்த மயில்,பொன்னணி பூண்ட இளம்பெண்போலக் காட்சியளிக்கின்ற மலை நாட்டை உடைய தலைவனே!<br>• எம் தலைவியின் நல்ல இல்லத்தில் இப்போது திருமணம் நடைபெறுகிறது. | |

| | | |
|---|---|---|
| | • முன்பு களவுக்காலத்தில் பிறர்அறியாமல் தலைவியின் கூந்தலில் மலர் சூட்டி மகிழ்ந்தாய்.<br>• இப்போது நீ, பலரும் மகிழ இவள் கூந்தலில் மலர் சூட்டி இனியதொரு செயலைச் செய்தாய்.<br>• இத்தகைய பெருந்தன்மையுடைய உன்னைப் பெற்ற பெற்றோர் என்ன தவம் செய்தாரோ ? அவர் நீண்ட நாள் வாழ்க! | |
| | **(அல்லது)**<br>**<u>“தண்ணீர் வங்கிகள் நமக்கு வேண்டும் “ என்று கவிஞர் மு.கருணாநிதி கூறியதற்கான காரணங்கள்:</u>**<br>• தண்ணீர் இறைக்கின்ற பலவிதமான பொறிகள் மூலம் நிலத்தடி நீரையெல்லாம் பயன்படுத்தி விட்டோம்.<br>• பசுமைப்புரட்சி மூலம் வேளாண்மையில் தன்னிறைவு அடைந்துவிட்டோம்.<br>• இத்தகைய செயலால் நிலத்தடி நீர் குறைந்து, குடிநீரைக்கூட விலைக்கு வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.<br>• வங்கியில் பணத்தைச் செலுத்திச் சேமிப்பைப் பெருக்குவது போலத் தண்ணீர் இருப்பைப் பெருக்க தண்ணீர் வங்கிகள் அவசியம்.<br>• மழைநீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுக்கவேண்டும்<br>• நமது வீட்டில் மழைநீர் சேமிப்புத் தொட்டியினை அமைக்க வேண்டும்.<br>• நீர் வளம் பெருக, ஏரி குளங்களைப் புதியனவாய் அமைக்க வேண்டும். | |
| 47 | “வைய மீன்றதொன்...” எனத் தொடங்கும் மொழி வாழ்த்துப்பாடல்<br>**அடிமாறாமல் எழுதுதல் 4 மதிப்பெண்**<br>**பாவகை 1 மதிப்பெண்**<br>வைய மீன்றதொன் மக்க ளுளத்தினைக்<br>கையி னாலுரை கால மிரிந்திடப்<br>பைய நாவைய சைத்த பழந்தமிழ்<br>ஐயை தாடலை கொண்டு பணிகுவாம்.<br>பாவகை : கலிவிருத்தம்<br>**(பாவகை மட்டும் எழுதியிருப்பின் 1 மதிப்பெண் வழங்கலாம்)** | |
| | **(அல்லது)**<br>**<u>“ஆதிமலை ...” எனத் தொடங்கும் மொழி வாழ்த்துப்பாடல்</u>**<br>ஆதிமலை யெங்களுக்கோ ஏதன்மலை யம்மே<br>ஆண்டவனார் எங்களைத்தாம் அமைத்தமலை யம்மே<br>நீதியென்ற நால்வரமுங் கொடுத்தமலை யம்மே<br>நித்தியமும் சாகாமல் நின்றமலை யம்மே<br>சாதனையாய்ப் பேய்பிறகு கெடுத்த மலை யம்மே<br>தற்பரனா் எம்மையங்கே சபித்த மலை யம்மே<br>பேதகமாய் நாங்களதை விட்டதற்பின் னம்மே<br>பெத்தலகேம் எங்களுக்குப் பெரியமலை யம்மே.<br>**பாவகை : எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**<br>**(பாவகை மட்டும் எழுதியிருப்பின் 1 மதிப்பெண் வழங்கலாம்)** | |